**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**S.C.No.56/2020**

தேதி – 17.02.2026

(அ.சா.6 ) – திரு. விலங்கடியான்

**2ம் எதிரி ஆஜர்**

சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. எனக்கு சம்பவத்தைப் பற்றி நேரடியாக தெரியாது என்றால் தெரியும். நான் 11.00 மணிக்கு மடத்திற்குச் சென்றேன். எங்கள் ஊர்க்காரர்கள் ஐந்துபேர் சென்றோம். நானும், பாண்டி, லிங்கன், கணேசன் மற்றொரு கணேசன் ஆகியோர் சென்றோம். நாங்கள் ஐந்துபேரும் ஒருவர் பின்பாக ஒருவர் சென்றோம். எனக்கு எங்கள் ஜாதி தலைவர் சம்பவம் பற்றி சொன்னார். மண்டபத்தின் அருகில் பொதுமக்களின் போக்குவரத்து அதிகம் இருக்கும் என்றால் சரிதான். மண்டபத்தைச் சுற்றி கடைகள் மற்றும் வணிக வளாகம் இருப்பதாகச் சொன்னால் சரிதான். எங்களது மடத்தில் 2,3 கடைகள் உள்ளது.

2. 2ம் எதிரி மடத்தில் கடை வைத்திருந்தார். அவர் எத்தனை வருடமாக கடை வைத்திருந்தார் என்று எனக்கு தெரியாது. 1ம் எதிரி மடத்தை ஒட்டியவாறு கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். அவர் தற்போது வரை கடை வைத்துள்ளார்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

K. BHARATHI

Digitally signed by K. BHARATHI
Date: 2026.02.17 17:07:34 +0530

Additional Sub Judge,
Palani.